**சுருக்கம்**

கலையும் பண்பாடும் – தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் 16.07.2018 முதல் 22.07.2018 வரை மதுரையில் இளந்தமிழர் இலக்கியப் பட்டறை நடத்தப்பட்டது – கலை நிகழ்ச்சிகள் வழங்கியது – உள்ளபடியான செலவினங்களுக்காக ரூ. 2,95,000/– நிதி ஒப்பளிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (பண்–2) துறை**

அரசாணை (ப) எண்.58

நாள்: 14–05–2019
திருவள்ளுவர் ஆண்டு 2050
விகாரி வருடம், சித்திரை 31

**படிக்கப்பட்டது**

1. இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை கடித ந.க. எண் ஆ.மொ.2/ 2501/18, நாள் 03.09.2018
2. கலை பண்பாட்டுத் துறை ஆணையரின் கடிதம் ந.க.எண்.1793/இ1/2019, நாள்: 28.03.2019

*****

**ஆணை:–**

தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் ஆண்டுதோறும் நடத்தப்படும் இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறை இவ்வாண்டு மதுரையில் 16.07.2018 முதல் 22.07.2018 வரை 7 நாட்கள் நடத்தப்பட்டது எனவும், இப்பயிற்சிப் பட்டறையை 16.07.2018 அன்று மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்கள் எனவும், இப்பயிற்சிப் பட்டறையில் தமிழகம் முழுவதிலும் இருந்து 250க்கும் மேற்பட்ட இளந்தமிழர்கள் 7 நாட்கள் மதுரை உலகத்தமிழ்ச் சங்கத்தில், உண்டு, உறைவிட வசதியோடு கலந்து கொண்டனர் எனவும், இலக்கியப் பேச்சாளர்கள், திரைப்பட பாடலாசிரியர்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சி தொகுப்பாளர்கள், ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள் என பலதரப்பட்ட ஆளுமைகள் இவ்விலக்கியப் பட்டறையில் பங்கேற்று பயிற்சியளித்தனர் எனவும், 22.07.2018 அன்று உலகத் தமிழ்ச் சங்க வளாகத்தில் நடைபெற்ற இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறை நிறைவு நிகழ்வில் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் ஆகியோர் பங்கு பெற்று பயிற்சிபெற்ற இளந்தமிழர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி சிறப்பித்தார்கள் எனவும் மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

2. தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் ஆண்டுதோறும் நடத்தப்படும் இளந்தமிழர் இலக்கியப் பட்டறை இவ்வாண்டு 16.07.2018 முதல் 22.07.2018 வரை 7 நாட்கள் நடத்தப்பட்டதாகவும், அந்நாட்களில் கலை பண்பாட்டுத் துறையின் மதுரை மண்டலக் கலை

பண்பாட்டு மையம் மூலம் தினமும் மாலை 5.00 மணி முதல் 8.00 மணி வரை நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டதாகவும், அதற்கென கீழே அட்டவணையில் தெரிவித்துள்ளவாறு ஏற்பட்ட உள்ளபடியான செலவினத் தொகையான ரூ.2,95,000/–க்கு நிதி ஒப்பளிப்பு செய்து அரசாணை வழங்குமாறு கலை பண்பாட்டு ஆணையர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார் :-

| வ. எண் | நாள் | நிகழ்த்தப்பட்ட நாட்டுப்புறக் கலை நிகழ்வுகள் மற்றும் பங்குபெற்ற கலைக்குழுக்கள் / கலைஞர்கள் விவரம் | செலவினத் தொகை ரூ. (மதிப்பூதியம், போக்குவரத்து, ஒப்பனை மற்றும் உள்ளூர் போக்குவரத்து உட்பட) |
|---|---|---|---|
| 1. | 16.07.2018 | கலைநன்மணி திரு.கே.குமரவேல் குழுவினர் – 30<br>1.கைச்சிலம்பாட்டம்<br>2.காவடியாட்டம்<br>3.ஒயிலாட்டம், நையாண்டி மேளம் | 45,000/– |
| 2. | 17.07.2018 | கலைச்சுடர்மணி திருமதி டி.சுஜாதா குழுவினர் – 30<br>1. வில்லுப்பாட்டு<br>2.தோற்பாவைக்கூத்து<br>3.தந்திரக்கலை நிகழ்ச்சி, நையாண்டி மேளம் | 45,000/– |
| 3. | 18.07.2018 | இசைக்கலைமணி திரு வி.இராஜமாணிக்கம் குழுவினர் – 30<br>1. தமிழிசை வாத்திய நிகழ்ச்சி<br>2.பரதநாட்டியம்<br>3.சிலம்பாட்டம், நையாண்டி மேளம் | 45,000/– |
| 4. | 19.07.2018 | கலைமாமணி திரு.சா.முத்துக்குமார் குழுவினர் – 25<br>1. கிராமியப் பாடல்<br>2.கரகாட்டம், காவடியாட்டம்<br>3. காளியாட்டம், நையாண்டி மேளம் | 35,000/– |
| 5. | 20.07.2018 | கலைநன்மணி திரு.ஆ.செல்லச்சாமி குழுவினர் – 25<br>1. சேவையாட்டம்<br>2.தேவராட்டம்<br>3.தப்பாட்டம், நையாண்டி மேளம் | 35,000/– |
| 6. | 21.07.2018 | துவரிமான் திரு.ச.சசிகுமார் குழுவினர் – 25<br>1. பொய்க்கால் குதிரையாட்டம்<br>2.ஒயிலாட்டம்<br>3.மயிலாட்டம், நையாண்டி மேளம் | 35,000/– |
| 7. | 22.07.2018 | திரு.மு.செல்லதுரை குழுவினர் – 40<br>1. மரக்கால் ஆட்டம்<br>2.தப்பாட்டம்<br>3.கரகாட்டம், காவடியாட்டம்,<br>4. காளையாட்டம், மயிலாட்டம், நையாண்டி மேளம் | 55,000/– |
| | | மொத்தம் | 2,95,000/– |

3. கலை பண்பாட்டு ஆணையரின் கருத்துருவினை ஆய்வு செய்து, அதனை ஏற்று, தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில், மதுரையில் 16.07.2018 முதல் 22.07.2018 வரை 7 நாட்கள் நடத்தப்பட்ட இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறையில், மதுரை மண்டலக் கலை பண்பாட்டு மையம் மூலம் நடத்தப்பட்ட நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பட்ட உள்ளபடியான செலவினத்

தொகையான ரூ.2,95,000/–க்கு (ரூபாய் இரண்டு இலட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும்:–

"2205 00 கலையும் பண்பாடும் – 102 கலை மற்றும் பண்பாட்டை வளர்த்தல் – மாநிலச் செலவினங்கள் – JA கலைப் பணிகளுக்கான ஒரு மொத்த நிதி ஒதுக்கம் – 309. உதவித் தொகை – 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை"
(த.தொ.கு.2205 00 102 JA 30903)

5. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்க கலை பண்பாட்டு ஆணையருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

8. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சாரா எண். 17299/ நிதி(கல்வி–II)துறை / 2019, நாள்.09.05.2019–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

அபூர்வ வர்மா,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
ஆணையர், கலை பண்பாட்டுத் துறை, சென்னை–8.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–9. (இருபடிகள்)
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (G&SSA), சென்னை–18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (E&RSA), சென்னை–18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (A&E), சென்னை–18.
உள்ளுரை தணிக்கை அலுவலர், முதன்மை கணக்காய்வுத் தலைவர்
(பொது மற்றும் சமூக பகுதி) அலுவலகம், சென்னை–9.
உதவி இயக்குநர், மண்டலக் கலை பண்பாட்டு மையம், மதுரை

நகல்:-
நிதி(கல்வி–II)த் துறை, சென்னை–9.
செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, சென்னை – 9
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலர்,
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை – 9.
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள்(பண்–1/பொது) துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு / நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

14/05/19

பிரிவு அலுவலர்

14.5.19